Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 301

வெள்ளிக்கிழமை
23 செப்ரெம்பர் 2022

புரட்டாதி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## புல்மோட்டை கனிய மணல் சீனாவுக்கு

திருகோணமலை துறைமுகம் 30 ஆண்டுகளுக்குப்பின்னர் தனது முதலாவது ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

இந்த முதல் ஏற்றுமதியாக புல்மோட்டை கனிய மணல் லிமிட்டெட் நிறுவனத்துக்குச் சொந்தமான கனிய மணல், சீனாவுக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## மின்வெட்டு அதிகரிப்பு

கொழும்பு, செப். 23

இன்றுமுதல் நாளை மறுதினம் வரை நாளொன்றுக்கு 2 மணித்தியாலங்கள் மற்றும் 20 நிமிடங்கள் மின்வெட்டை மேற்கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

பழைய லக்ஸபான அனல்மின் நிலையத்தின் 1ஆம் நிலை இயங்காமை, வெஸ்ட் கோஸ்ட் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் 09

போதையில் வெறித்தனம்:

## சகோதரரின் மனைவியுடன் தவறான உறவுக்கு முயற்சி

### இளைஞன் விரைவில் கைது?

யாழ்ப்பாணம், செப். 23

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மூத்த சகோதரரின் மனைவியுடன் தவறான உறவுக்கு முயற்சித்த இளைஞனைக் கைது செய்வதற்கு பொலி 09

நிறைவெறியில்

## சுற்றுலாவிப் பெண் மீது கூட்டுப் பாலியல் சேட்டை

### காரைநகரில் 10 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 23

காரைநகருக்கு சுற்றுலாவியாக வந்திருந்த ஸ்பெயின் நாட்டுப் பெண்ணை 10 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து அச்சுறுத்தி, பாலியல் சேட்டையில் ஈடுபட்டனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், பாலியல் சேட்டை புரிந்தனரென அடையாளம் காணப்பட்ட 10 இளைஞர்கள் நேற்றிரவு 12

சிறுவர் நன்னடத்தை திணைக்களம் அதிர்ச்சித் தகவல்

# சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கை வடக்கில் சடுதியாக அதிகரிப்பு

★ பெற்றோரே ஒப்படைக்கின்றனர்
★ பொருளாதார நெருக்கடியே காரணம்
★ முன்னிலையில் யாழ். மாவட்டம்

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23**

**அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளைப் பராமரிக்க முடியாதெனத் தெரிவித்து, சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில், பெற்றோரால் ஒப்படைக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு சடுதியாக அதிகரித்துள்ளது. அதிலும் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான பிள்ளைகள் அப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.** 12

யாழ். நகரில்

## பாடசாலை மாணவன் ஹெரோய்னுடன் கைது

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபலமான ஆண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 16 வயது மாணவன் ஒருவன் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளான். (அ-ஒ-5)

## ஐஸ் போதை; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 23

யாழ். நகருக்கு அண்மையாகவுள்ள ஐந்து சந்திப்பகுதியில் வசிக்கும் 36 வயதுடைய நபர் ஒருவர் ஐஸ்போதைப் பொருளை நுகர்ந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-5)



**"கேக்கிறவன் கேனையன் எண்டால் ஏரோப்பிளேனைக் கொண்டு வாங்கோ எண்டு எருமைமாடும் கேக்குமாம்"**

இலங்கையில்

## இராவணனும் இல்லை; சிவ வழிபாடும் இல்லை

### வன்மத்தைக் கக்கிய சரத் வீரசேகர எம்.பி.

விரிவு - பக். 12

## பலாலிக்கு விமானத்தை கொண்டு வாருங்கள்!!!

### கூட்டமைப்பிடம் நிமால் கோரிக்கை

கொழும்பு, செப். 23

பலாலி விமான நிலையத்துக்காக எமது தரப்பில் இருந்து செய்யக் கூடிய அனைத்தையும் செய்துவிட்டோம். ஆனால், விமானங்கள் வருவதில்லை. 09

## ரவிகரன், மயூரன் நேற்று பிணையில் விடுவிப்பு!

### தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் பணிப்பு

முல்லைத்தீவு, செப். 23

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் போராட்டம் மேற்கொண்டமைக்காக தொல்லியல் திணைக் களத்தின் 09

குருந்தூர்மலை விவகாரம்;

## அரசாங்கத்துக்கு எதிராக பலமுனைப் போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 23

நீதிமன்ற உத்தரவைப் புறந்தள்ளி குருந்தூர் மலைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் கட்டுமானங்கள், ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதி கோரிப் போராடியவர் 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் தீவிரமாகும்!

## நாடாளுமன்றத்தில் கம்மன்பில சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப். 23**



**பொருளாதார மீட்சி என்ற பெயரில் அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மிகவும் வேதனைக்குரியவை. வரி அதிகரிப்பானது மக்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தும். நெருக்கடிகள் நிறைந்த நிலையிலும் அரசாங்கம் பொறுப்பற்ற முறையில்தான் செயற்படுகின்றது என்று தெரிவித்தார் பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடி தீவிரமடையும். எனவே, நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என அரச தலைவர்கள் நாட்டு மக்களுக்கு உபதேசம் வழங்க முன்னர் அவர்கள் நாட்டு மக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக செயற்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. மக்களாதரவு இல்லாமல் எப்பிரச்சினைக்கும் தீர்வுகாணமுடியாது. பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் தீர்வு காணும் என மக்கள் முதலில் நம்பிக்கை கொள்ளவேண்டும். இவ்விடயத்தில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும்.

1972ஆம் ஆண்டு இந்தியா பொருளாதார ரீதியில் மோசமான நெருக்கடியை எதிர்கொண்ட போது அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அரசியல்வாதிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக செயற்பட்டார். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வரை, தான் இரவு உணவை உட்கொள்ளப் போவதில்லை என அவர் பகிரங்கமாக அறிவித்தார்.

அப்போதைய இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்திரா காந்தியிடம் 'நீங்கள் இரவு வேளை உணவை புறக்கணிப்பதால் இந்தியாவின் பலகோடி மக்களின் பசியை எவ்வாறு போக்குவது?' என வினவியுள்ளார்.

அதற்கு இந்திரா காந்தி 'நான் பசியுடன் இருக்கின்றமையால், பசியுடன் உள்ள அனைவருக்கும் உணவு கிடைக்காது என்பது உண்மை. ஆனால், நானும் பசியுடன் உள்ளேன் என பசியில் இருப்பவர்கள் அறிந்துகொண்டால், அவர்களுக்கு என்மீது நம்பிக்கை வரும். அத்துடன், பசியின் கொடுமையை நானும் உணர்வதால் பொருளாதார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காண்பேன் என மக்கள் என்மீது நம்பிக்கை கொள்வார்கள். பிரச்சினைக்கு தீர்வு காண மக்களின் நம்பிக்கை முக்கியமானது' என்று குறிப்பிட்டார்.

எனவே, எமது நாட்டு அரச தலைவர்களும் இந்திராகாந்தியை சிறந்த எடுத்துக்காட்டாக கொள்ள வேண்டும். ஆனால், இங்கு நிலைமை தலைகீழாக உள்ளது. அமைச்சரவை அமைச்சுக்களும், இராஜாங்க அமைச்சுக்களும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அரச செலவினங்கள் மட்டுப்படுத்தப்படவில்லை. இவ்வாறு பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் நாட்டு மக்கள் எவ்வாறு ஆதரவு வழங்குவார்கள்? பொருளாதார மீட்சிக்கான தீர்மானங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் விடயங்கள் மிகவும் வேதனைக்குரியவை - என்றார். (ம)

# ஐ.நா. பொதுச்சபை அமர்வின் உயர்மட்ட விவாதம் ஆரம்பம்

கொழும்பு, செப். 23

நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் பொதுச்சபை அமர்வின் உயர்மட்ட விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் கடந்த 12ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெறும் அதே வேளை, ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77ஆவது கூட்டத்தொடர் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாளை சனிக்கிழமை உரையாற்றவுள்ளார். (ச-இ)

# நாட்டின் நிதியதிகாரம் நாடாளுமன்றத்திடமே!

## லக்ஷ்மன் கிரியெல்ல எடுத்துரைப்பு

கொழும்பு, செப். 23



அரசமைப்பின் பிரகாரம் நாட்டின் நிதி அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் உண்டு என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோது லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகத்தர் மட்ட அறிக்கையை அரசாங்கம் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு, அரசியல் கட்சித் தலைவர் கூட்டத்தில் பலமுறை வலியுறுத்தியுள்ளபோதிலும், இதுவரை அந்த அறிக்கை நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் சர்வகட்சி மாநாடு இடம்பெற்றபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தினார். அதற்கு அப்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச மறுப்புத் தெரிவித்தபோது தனக்கு சமர்ப்பிக்க வேண்டாம், நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டார். ஆனால் தற்போது அவர் அதை மறந்துவிட்டு செயற்படுகிறார்.

அரசமைப்பின் பிரகாரம் நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு. ஜனாதிபதிக்கு நிதி அதிகாரம் இல்லை. ஜனாதிபதிக்கு நிதி வழங்குவதாயின் அதற்கு நாடாளுமன்றமே அனுமதி வழங்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை பகிரங்கப்படுத்தாமல் இரகசியமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ம-14.இ)

# அரசாங்கத்தின் அடக்குமுறைகள் நாடாளுமன்றிலும் தொடர்கின்றன

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 23

அரசாங்கத்தின் அடக்குமுறைகள் தற்போது நாடாளுமன்றத்தினுள்ளும் தொடர்கின்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்தை முழுமையாக சீரழிக்கும் வகையில் கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகின்றது என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு உரியவாறு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படாமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள அடக்குமுறைகள் நாட்டினுள் மாத்திரமன்றி, நாடாளுமன்றத்தினுள்ளும் தொடர்கின்றன. சுயாதீனமாக செயற்படும் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமை இன்று வழங்கப்படவில்லை. நாட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வேளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன.

இது நாடாளுமன்ற ஜனநாயகத்தை முழுமையாக சீரழிக்கும் செயற்பாடாகும். இது தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேசத்தின் மத்தியிலும் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம். அத்துடன், பொதுநலவாய நாடாளுமன்ற சங்கம், சர்வதேச நாடாளுமன்ற சங்கம் மற்றும் சார்க் வலய நாடுகள் அமைப்பு என்பவற்றிடமும் இது தொடர்பில் எழுத்து மூலம் தெரியப்படுத்துவோம் - என்றார். (ம-14.இ)

# ஐ.எம்.எப். உடன் இன்னமும் உடன்பாடுகள் எட்டவில்லை!

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 23



சர்வதேச நாணய நிதியத்துடன் இன்னமும் இறுதி உடன்பாடு எட்டவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்கள் தொடர்கின்றன. பணியாளர் மட்ட உடன்படிக்கை மாத்திரம் சாத்தியமாகியுள்ளது. எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அதற்கு அனுமதி வழங்கவில்லை. இறுதி உடன்படிக்கை சாத்தியமானதும் அமைச்சரவைக்கு அறிவிக்கப்படும் - என்றார். (ம-14.இ)

# பொறுப்புக்கூறலை வலுப்படுத்த தவறியுள்ள ஐ.நா.வின் தீர்மானம்!

## இரண்டாவது நகல் வடிவில் பல மாற்றங்கள்; தமிழ் மக்களுக்கு மீண்டும் ஏமாற்றம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தின் இரண்டாவது நகல் வடிவம் வெளியாகியுள்ளது.

அதில் சிறிலங்காவின் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவையும் இல்லை என்று கூறப்படுகின்றது.

சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் உள்ளன என்று செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை மீள வலுப்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்குப் பதில் நகல் வடிவம் பயனுள்ள சுயாதீனமானச் செயற்பாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நகல்வடிவ தீர்மானத்தில் சொற்கள் மாற்றப்பட்டுள்ளமை சிறிலங்காவின் அவலங்களுக்கான மூல காரணங்களை அடையாளம் காண்பதில் அடிப்படை தோல்வி ஏற்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளன என்று ஜெனிவா செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தீர்மானத்தின் மொழிநடை சிறிலங்காவுக்கு இணக்கமாக இருக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது என்றும் அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள்; மக்களுடன் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், செப். 23

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களுடன் தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று, பரந்தன் பகுதியில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் க.விமலரூபன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர். (ம-14-316)



வலி. மேற்குப் பிரதேசசபையில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாதாந்த அமர்விலேயே சபை உறுப்பினர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி திலீபனுக்கு இரு நிமிட அஞ்சலி செலுத்தினர். (ச-27)



தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித்துறை எம்.ஜி.ஆர் சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நினைவேந்தலில் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அப்பகுதி இளைஞர்கள் மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (ச-20-26)

### குருந்தூர்மலை பௌத்த ஆக்கிரமிப்பு

# நீதிமன்றத்தின் உத்தரவு செயலிழந்து போயுள்ளதா?

### சிறீதரன் எம்.பி. கேள்வி




**முல்லைத்தீவு, செப். 23**

**இலங்கையில் நீதிமன்றங்கள் செயலிழந்து போயுள்ளனவா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த பிக்குவும் தொல்பொருள் திணைக்களமும் அடாத்தாக நிலங்களை ஆக்கிரமிக்க முடியுமா? அப்படி என்றால் நீதிமன்றத்தின் கட்டளை என்பது இந்த நாட்டில் வலுவற்றதா? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன்.**

குருந்தூர்மலையில் முன்னெடுக்கப்படும் பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தை பௌத்த பேரினவாதம் ஆக்கிரமித்து நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை அமைக்கும் செயற்பாடுகளைத் தமிழ்மக்கள் எதிர்க்கின்றார்கள். ஆனால், சிங்கள பேரினவாத அரசு வெறித்தனமாக தமிழர்களின் நிலங்களை பறிப்பதையும், ஆக்கிரமிப்பதையும், சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதையும் முழுமூச்சாகச் செய்து வருகின்றது. குருந்தூர்மலையில் எந்தக் கட்டுமானங்களையும் மேற்கொள்ளக் கூடாது என்று நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவையும் மீறி அடாத்தாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றால், நீதித்துறை இந்த நாட்டில் வலுவிழந்து போயுள்ளதா? என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியுள்ளது.

நீதிமன்றங்களுக்கும் நீதிக்கும் இடமில்லாத முறையில், அடத்தாக இந்த இடங்களைப் பிடித்து சிங்கள ஆக்கிரமிப்புப் செய்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த ஆக்கிரமிப்புக்களை சர்வதேச சமூகம் கண்டுகொள்ள வேண்டும். இது தமிழர்களை இந்த மண்ணில் இல்லாமல் செய்வதற்காக சிங்களம் செய்கின்ற மிகப்பெரிய அபாயகரமான நடவடிக்கை. இதற்கு எதிராக சர்வதேச சமூகம் தன்னுடைய அழுத்தத்தைக் கொடுக்கத் தவறினால், தமிழர்கள் இந்த நிலத்தில் இருந்து அழிக்கப்படுவார்கள் என்பதுதான் உண்மை - என்றார். (ம-19)

### ரணில் இல்லத்துக்கு தீ வைத்தபோது

## சமபோஷா பைக்கற் திருட்டு: சந்தேக நபர்களுக்குப் பிணை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டபோது, அத்துமீறி நுழைந்து சமபோஷா பைக்கற்றைத் திருடிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 சந்தேகநபர்களை தலா 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதிவான் திலன கமகே உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர்கள் 51 நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களின் வயது மற்றும் விசாரணையின் முன்னேற்றம் உள்ளிட்ட பல விடயங்களை கருத்திற்கொண்டு பிணை வழங்கப்பட்டுள்ளது என நீதிவான் திலன கமகே தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் 5ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்காக மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-இ)

## தியாகதீபம் திலீபனை அரசியலாக்க முயற்சி

### ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 23

தியாக தீபம் திலீபனை கட்சி அரசியலுக்காகப் பயன்படுத்த சிலர் தீவிரமான முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த நிலைமைகளை போராளிகள் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாகதீபம் திலீபனின் வரலாறு என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாறாக இருக்கின்றது. தமிழ் மக்களுடைய விடுதலைக்காக ஜனநாயக வழியில் அஹிம்சை போராட்டத்தைத் திலீபன் மேற்கொண்டார். தமிழ்த் தேசிய விரோதக் குழுக்களால் மக்களுக்கான தலைமைத்துவம் சிதைக்கப்பட்டிருக்கின்றது.

அரசியலுக்காக தமிழ்த் தேசிய போராட்டத்தை விற்றுப் பிழைக்காதீர்கள். அதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மா இருக்கப் போவதில்லை. மக்களுக்கு உண்மையான நேர்மையான தலைமைத்துவத்தை வழங்க நாம் தயாராகிக் கொண்டே இருக்கின்றோம். விடுதலைப் புலிகள் இல்லை என்பதற்காக நாங்கள் தான் தமிழ்த் தேசியவாதிகள் எனக் கூறிக்கொண்டு யாரும் இங்கு வரக்கூடாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியினுடைய தலைவர், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் போராளிகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அரசியலை முன்னெடுக்கின்றார். இந்த வங்குரோத்தான அரசியலுக்காக ஒருபோதும் நாங்கள் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் - என்றார். (ம-14-26)

# நுகர்வுக்குப் பொருத்தமற்ற போஷாக்கு மா விநியோகம்

### 4 நிறுவனங்களுக்கு அழைப்பாணை

கொழும்பு, செப். 23

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற சமபோஷ, யஹபோஷ மற்றும் லக்போஷா ஆகியவற்றை உற்பத்தி செய்து விநியோகித்தமை தொடர்பில் 4 முன்னணி நிறுவனப் பணிப்பாளர்களை நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த நிறுவனங்கள் 3 வயது வரையிலான பிள்ளைகளுக்கு பொருந்தாத வகையில் பரிந்துரைக்கப்பட்[illegible] எப்ளடொக்சின் அதிகமாக சேர்த்துள்ளமை இரசாயன பகுப்பாய்வு மூலம் உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்து குறித்த நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை ஆராய்ந்த நீதிவான் குறித்த நிறுவனங்க[illegible] அழைப்பாணை பிறப்பித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி வெள்ளியம்பலம் யோகேஸ்வரி

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் முதலியார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற யாழ்.போதனா மருத்துவமனை ஊழியர் திருமதி வெள்ளியம்பலம் யோகேஸ்வரி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டினர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும் வெள்ளியம்பலம் (நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலய முன்னாள் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும் யுசித்தா, சுஜித்தா, மகிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரமோகன், ஜெபஜீவன் ஈஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான யோகவனம், பூமணி, இரத்தினம், காசிலிங்கம், மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, செல்லம்மா, இராசம்மா, கனகம்மா, தையல்நாயகி மற்றும் திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சயூசன், பிருந்துசான், பிருந்துசன், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 /11 முதலியார் ஒழுங்கை, நல்லூர் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
0775281157

# மரண அறிவித்தல்



## திருமதி லவநேசகுமார் சுதாயினி (சுதா)

உதயசூரியன் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் சரவணமுத்து மானிப்பாய் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லவநேசகுமார் சுதாயினி (சுதா) அவர்கள் (21.09.2022)புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னார் இரத்தினம் அருமைராணி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா இளையபிள்ளையின் பாசமிகு மருமகளும் லவநேசகுமாரின் பாசமிகு மனைவியும் நிதர்சனாவின் அன்புத்தாயாரும் சந்திரபாலா, விஜயபாலா, இந்திரபாலா, சுமதினி, சுயேந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரஞ்சனா, அமரர் புஷ்பராணி, ஜெயகாந்தகுமார் (காந்தன்), சுஜிதகுமார்,வசந்தி, கௌசலா, வதனி,சுதா,ரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டிபர்சன்,புவிஸ்கா அவர்களின் பாசமிகு செல்லத்தாயாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் .

இவ்வறிவித்தலை உற்றார் ,உற்வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தொ.பே. 0761321961,
0763798576

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பிரதேச செயலக கிராம அலுவலர்

## துஷாந்தன் மேரி ஜெனுஜா

கள்ளமில்லாச்சிரிப்பும் கபடமில்லாப் பேச்சும்
கனவாகிப்போக எங்கு சென்றாய்
தாங்கவில்லை உன்பிரிவு
இறையடியில் அமைதி கொள்வாய்

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மண்ணில் : 23.10.1990
விண்ணில் : 21.09.2022

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச்சங்கம் பிரதேச செயலகம்,
தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை,

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்

"அன்னையுடன் மகிழ்ந்த நாளை
மனதில் வைத்துப் பூசிக்கின்றோம்"

தோற்றம் - 15. 03. 1945 மறைவு - 22. 08. 2022



கடந்த (22.08.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

அமரர் **பராபரம் செல்வராணி** [ஓய்வு நிலை ஆசிரியர்]

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோருக்கும், தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோ ருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூ டாகவும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில் தெற்கு,இணுவில்.

பராபரம் குடும்பத்தினர்
077 603 0667

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24
.
08
.
1984



மறைவு
04
.
10
.
2021

## அமரர் திருமதி கனீதனா (நீத்தா) சசிவர்ணன்

நீங்காத நினைவுகள் தந்து
நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.12, பழைய தபால் கந்தோர் வீதி,
கே.கே.எஸ் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 8153538
0760686094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பக்குவமாகப் பேசும் குழுவும் பகல்கனவும்

பிரச்சினையைத் தீர்க்கவெனத் தெரிவுசெய்யப்பட்டவர்களே பிரச்சினைக்குரியவர்களாக மாறுவதென்பது தமிழர்களுக்கு மட்டுமே கிடைத்த சாபக்கேடு. இதனால் மக்கள் பிரதிநிதிகள் எனச் சொல்லப்படுபவர்கள், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடவும், தமக்குள் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே தம் பதவிக்காலத்தைக் கடத்திவிடுகிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்வின்றி நீள்வதற்கு, நாம் தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகளும் மிகமுக்கியமான காரணர். இதன் ஆகப்பிந்திய உதாரணமே தமிழரசுக் கட்சிக்குள் அமைக்கப்பட்டுள்ள 'பக்குவமாகப் பேசும் குழு'.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கையாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனின் அரசியல் அறிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சரியான திசையில் கொண்டு நகர்த்தும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள்.

ஆனால், மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக, பதவிப் போட்டிகளும், அதிகார ஆசைகளும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதறடித்துக் கொண்டிருக்கின்றன. பெயரில் மட்டுமே கூட்டமைப்பு என்று கூறுமளவு அதிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றை ஒன்று எப்படி 'வெட்டியாடுவது' என ஒருபுறம் காய்களை நகர்த்த, இன்னொரு புறத்தில் பதவிகளுக்காக தத்தமது கட்சிக்குள்ளேயே 'குத்துவெட்டில்' இறங்கி, மக்கள் எதிர்பார்ப்புக்கு எதிரான திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதற்கு விதிவிலக்கல்ல. மூப்பின் காரணமாக தளர்வடைந்திருக்கும் அவர், நடமாட முடியாத நிலைமையிலும் இன்னமும் தனது பதவிகளை விட்டுக் கொடுக்க மனமின்றி இறுகப் பிடித்திருக்கின்றார். ஜெனிவாவிலும், சர்வதேச அரங்கிலும் தமக்காக கூட்டமைப்பினர் குரல் கொடுப்பார்கள் என்று மக்கள் நம்பியிருக்க, அவர்களோ தமது தலைவர் இரா.சம்பந்தனிடம் இருந்து 'பக்குவமாகப் பேசி' பதவிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டம் கூடிக் குழு அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, கியூபாவின் ஆட்சியாளர் பிடல் கஸ்ரோ போன்றவர்கள் தள்ளாத வயதிலும் அதிகாரத்தில் இருந்தார்கள். ஆனால், பிடல் கஸ்ரோ தனது உடல் நிலைமை ஒத்துழைக்காதபோது, அடுத்த கணமே பொறுப்பை வேறொருவரிடம் ஒப்படைத்து ஓய்வெடுத்துக் கொண்டார். தமிழகத்தின் முன்னாள் முதல்மைச்சர் கருணாநிதி, இறக்கும்வரையில் அதிகாரத்தில் இருந்தபோதும் தனக்குப் பின்னர் பொறுப்பைச் சுமக்கக்கூடிய ஒருவரை உருவாக்கி இருந்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த இரு விடயங்களிலும் கோட்டை விட்டுள்ளார்.

தனக்குப் பின்னே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டு நகர்த்தக் கூடிய ஒருவரை உருவாக்கத் தவறியுள்ள இரா.சம்பந்தன், இறுதிவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவே இருந்துவிட விரும்புகின்றார். அவ்வாறு கூட்டமைப்பின் தலைமைப் பதவியையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தால், கொழும்பு வீடு உள்ளிட்ட பல சலுகைகளையும் இழக்கவேண்டி வரலாம் என்பதாலும், தனக்குப் பின்னர் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு பொருத்தமான நபர்களை இனங்காண முடியாமையாலுமே, இன்னமும் அவர் பதவிகளைக் கைவிடும் கருமத்தையாற்றுகிறாரில்லை. ஏற்கனவே சிதறுண்டு இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, இரா.சம்பந்தனின் போக்கு இன்னமும் சில்லு சில்லாக உடைக்கும் என்பதில் ஐயமில்லை. 'பக்குவமாகப் பேசி' இரா.சம்பந்தனிடம் இருந்து பதவிகளை வாங்கிக் கொண்டாலும் அந்தப் பதவிகளை வகிக்கக் கூடிய தகுதியுடையவர்கள் யார்? என்பது குறித்தும் இன்னொரு வாய்க்கால் சண்டை, தமிழரசுக் கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் எழுவது நிச்சயம். கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் பதவிகளில் இருந்தாலும் பிரச்சினை, அவற்றை விட்டு இறங்கினாலும் பிரச்சினை என்ற நிலை இப்போது எழுந்துள்ளது. மாறாக முன்னரேயே இது குறித்த தொலைநோக்குப் பார்வையோடு, இரண்டாம் கட்டத்தலைமைகளை உரியவகையில் சம்பந்தரும், கூட்டமைப்பும் வளர்த்தெடுத்திருந்தால், இப்படி சிக்கல் தோன்றியிராதே. மக்களின் உரிமைகளுக்காக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்த 'பேச்சுவார்த்தைக் குழு' அமைத்த காலம் மலையேறிப் போய், இப்போது தம்மைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியின் தலைவரை பதவியில் இருந்து இறக்குவதற்கு 'பக்குவமாகப் பேசும்குழுவை' அமைக்கும் நிலை. தமிழர்களின் உரிமைகள் யாவும் பகல்கனவாக மாறிக்கொண்டிருப்பதை எப்போதுதான் இந்த அரசியல்வாதிகள் உணரப்போகின்றனரோ!

### நாளொரு நல்வார்த்தை

"கண் பார்வையற்றவன் குருடன் அல்ல. தன் குற்றம் குறையை உணராமல் எவன் இருக்கிறானோ அவனே உண்மையான குருடன்"

- மகாத்மா காந்தியடிகள்




## நாணய நிதியத்தின் ஒப்பந்தம்
# இலங்கையின் கழுத்தை நெரிக்க அனுமதியோம்!
### வீரவன்ஸ போர்க்கொடி

**கொழும்பு, செப். 23**



**சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் இலங்கையின் கழுத்தை நெரிப்பதற்கு இடமளிக்க முடியாது. நாணய நிதியத்துடனான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் உடன் வெளிப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்றதன் பின்னர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று சில தரப்பினர் நம்பினர். ஆனால், அவ்வாறு எவையும் இடம்பெறவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களைத் தவிர அவரால் வேறு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? தற்போதைய தேவை எதிர்பார்ப்புக்களை உருவாக்கிக் கொண்டிருப்பதல்ல. பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுப்பதைத் தவிர இந்த அரசாங்கத்திடம் வேறு எந்தத் திட்டமிடலும் இல்லை. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டை இதுவரையில் நாடாளுமன்றத்துக்கு வெளிப்படுத்தவில்லை. ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள விடயங்களை உடன் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ம)

# நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை இப்போது பகிரங்கப்படுத்த முடியாதாம்
### இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்பகட்ட இணக்கப்பாட்டு அம்சங்களை பகிரங்கப்படுத்த முடியாது. இறுதிக்கட்ட பேச்சு வெற்றிகரமாக நிறைவு பெற்றதன் பின்னர், முழுமையான அறிக்கை நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கும் விடயங்களை மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. நிதி மற்றும் சட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகளுக்கு அமையவே ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இறுதிக் கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அறிக்கை முழுமையாக நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் - என்றார். (ம)

**நாளை** 24.09.2022 சனிக்கிழமை புரட்டாதி - 07

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்

# திலீபனுடன் ஒன்பதாம் நாள்...





## 23.09.1987

அதிகாலை 5 மணியிருக்கும் கிழக்குப் பக்கத்தே தேர்முட்டி வாசலில் நின்றிந்த வேப்ப மரத்தினின்று குயில் ஒன்று கூவிக்கொண்டிருக்கிறது. அதன் குரலில் தொனித்த விரக்தியின் சாயலைக் கேட்ட நான், திலீபனை ஏக்கத்துடன் பார்க்கிறேன். அந்தக் குயில் எதை இழந்து இப்படிக் கூவுகிறதோ தெரியவில்லை. ஆனால் இந்தக் குயில்...? எம்மை எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே... இந்தச் சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை....? திலீபனை நன்றாக உற்றுப்பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால், சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் பாளம், பாளமாக வெடித்து வெளிறிவிட்டிருந்தன. கண்கள் இருந்த இடங்களில் இரு பெரிய குழிகள் தெரிகின்றன. இன்று காலை எட்டரை மணியில் இருந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினேழு பாடசாலைகளிலிருந்து சுமார் 5 ஆயிரம் மாணவ, மாணவிகள் அணிவகுத்து வந்து திலீபனைப் பார்த்து கண்கலங்கியவாறு மைதானத்தை நிறைத்துக் கொண்டிருந்தனர். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியர்களும் ஏராளமாக வந்து பார்த்தனர்.

காலை ஒன்பது மணியளவில் யாழ். கோட்டை இந்திய இராணுவ முகாம் முன்பாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பிரதான வாசலில் அமர்ந்து, இந்தியப் படையினர் வெளியே வராதவாறு மறியல் செய்யத் தொடங்கினர். பொதுவாக திலீபனின் உடல்நிலை மோசமடைந்து வந்த அதேவேளை பொதுமக்களின் குமுறலும் அதிகரிப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. திலீபன் தங்கள் குடும்பத்தில் ஒருவன் என்ற எண்ணமே ஒவ்வொருவர் மனதிலும் நிறைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று காலையில் இந்தியப் படையின் தென்பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் ஹெலிகொப்டர் மூலம் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். பின்னர் இருவரும் தனித்தனியான வாகனங்களில் புறப்பட்டு யாழ்.கோட்டை இராணுவ முகாமுக்குள் சென்றனர். ஒரு மணிநேரத்துக்கு மேலாக இருவரும் பேச்சில் ஈடுபட்டனர். ஆனால் கிடைத்தது ஏமாற்றம்தான்!

கோட்டை வாசலில் மறியல் செய்த ஆயிரக்கணக்கான பொதுமக்களின் எழுச்சியைக் கண்ட பின்னர் தான் தளபதியவர்கள் தலைவர் பிரபாகரனை காணப் பறந்து வந்திருக்க வேண்டும். இன்று முற்பகல் 10 மணியளவில் திலீபனின் மேடைக்கு அருகேயுள்ள மேடையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இந்திய வம்சாவழியினர் சார்பில் பேசிய கணேசராசா என்பவர் 'பாரத அரசு விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கையை ஏற்று திலீபனின் உண்ணாவிரதத்தை முடித்துவைக்க வேண்டுமென்றும் இல்லையேல் இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்' என்றும் பேசினார். திலீபனைப் பார்வையிட வருவோர் தங்கள் கருத்துக்களை சில நாள்களாக எழுத்து மூலம் வழங்கி வருகின்றனர். இதற்காக நான்கு போராளிகள் கை ஓயாமல் ஒரு மூலையில் அமர்ந்திருந்து எழுதிக்கொண்டிக்கின்றனர். இதுவரை 1500க்கும் மேற்பட்டோர் தமது கருத்துக்களை மிக உருக்கமாக எழுதியிருந்தனர்.

■ ■ ■ ■ ■

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச அலுவலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொதுமக்கள் மறியல் செய்துவருகின்றனர். பல கிராமங்களில் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எங்கும் எதிலும் திலீபன் என்ற கோபுரம் மக்கள் சக்தியால் உயர்ந்துவிட்டதைக் காணமுடிந்தது. ஆம்! மக்கள் புரட்சி வெடிக்கத் தொடங்கிவிட்டது. திலீபனின் ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு பல தொண்டர் ஸ்தாபனங்கள், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு மனுக்களை இன்று அனுப்பி வைத்திருக்கின்றன என சில தமிழ்ப்பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

1. யாழ். பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு.
   (இந்தியத் தூதுவர் ஊடாக அனுப்பப்பட்டது)
2. வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம்.
   (பிரதி தமிழக முதல்வருக்கும் அனுப்பப்பட்டது)
3. வட மாகாணம் பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
4. தொண்டைமானாறு கிராமமட்ட கடற்றொழில் சமூக அபிவிருத்திச் சங்கம்.
5. வடபிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம்

என்பன அவற்றில் சிலவாகும். இன்று மன்னாரிலுள்ள இந்திய அமைதிப்படை முகாமுக்கு முன், திலீபனுக்கு ஆதரவாக மனுவொன்றைக் கொடுப்பதற்காக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்றபோது, ஆத்திரமடைந்த இந்திய அமைதி காக்கும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் உயிரிழந்தார் என்றும், 18 பேர் படுகாயமடைந்தனர் என்றும் எமது தகவல் தொடர்புச் சாதன செய்திகள் கூறுகின்றன.

இன்று மாலை என் காதில் ஓர் இனிய செய்தி வந்து விழுந்தது. இந்தியத் தூதுவர் தீட்சித் தலைவர் பிரபாவைச் சந்திப்பதற்கு வந்திருக்கிறார் என்பதுதான் அது! பிற்பகல் 1.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை இரு குழுக்களும் அமைதியாகப் பேச்சுக்களை நடத்தின. இந்தியத் தரப்பில் இந்தியத் தூதுவர் ஜெ.என்.தீட்சித், இந்தியப் படையின் தென் பிராந்தியத்

> **இந்தக் குயில்...? எம்மை எம் இனத்தைக் காக்க தன்னையே இழந்து கொண்டிருக்கிறதே... இந்த சிறு குயிலின் சோக கீதம் உலகத்தின் காதுகளில் இன்னுமா விழவில்லை....? திலீபனை நன்றாக உற்றுப்பார்க்கிறேன். அவரின் உடலிலுள்ள சகல உறுப்புகளும் இன்று செயலற்றுக் கொண்டிருக்கின்றன.**

தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், அமைதி காக்கும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத் சிங், பிரிகேடியர் பெர்னான்டஸ், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி, கப்டன் குப்தா ஆகியோரும், விடுதலைப்புலிகளின் தரப்பில் தலைவர் வே.பிரபாகரன், பிரதித் தலைவர் கோ.மகேந்திரராசா (மாத்தையா) அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர்) செ.கோடீஸ்வரன் (வழக்கறிஞர்) சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேச்சில் கலந்துகொண்டனர். பேச்சு நடந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்ததும், என்னை அறியாமலே என் மனம் துள்ளிக் குதித்தது. ஒன்பதாம் நாளான இன்று ஒரு நல்ல முடிவு எப்படியும் ஏற்படும். அந்த நல்ல முடிவு ஏற்பட்டதும் உடனடியாக திலீபனை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்த்து விசேட சிகிச்சைகள் அளித்தால் 24 மணித்தியாலங்களில் அவர் ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பிவிடுவார்.

எமக்காக இத்தனை நாள்களாகத் துன்பப்பட்டு அணு, அணுவாகத் தன்னை வருத்திக்கொண்டிருக்கும் அந்த நல்ல இதயம், நிச்சயம் பூத்துக்குலுங்கத்தான் போகிறது என்ற கற்பனைக் கடலில் இரவு 7.30 மணிவரை நானும், என் நண்பர்களும், மிதந்து கொண்டிருந்தோம். இரவு 7.30 மணிக்கு அந்தச் செய்தி என் காதில் விழுந்தபோது இந்த உலகமே தலைகீழாகச் சுற்றத் தொடங்கியது. அந்த கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் தகர்ந்து தவிடுபொடியாகியது.

பேச்சுவார்த்தையின்போது இந்தியத் தூதுவரால் வெறும் உறுதிமொழிகளைத்தான் தரமுடிந்தது. திலீபனின் உண்ணாவிரதப்போராட்டம் ஒரு தொடர்கதையாக ஆகிவிட்டது. எழுத்தில் எந்தவித உறுதிமொழிகளையும் தர இந்தியத் தரப்பு விரும்பவில்லை என்பதை அவர்களின் நடத்தை உறுதி செய்தது. திலீபனின் மரண பயணம் இறுதியானது என்பதையும் அது உணர்த்தியது. ■

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** அடுத்தவர் பிரச்சினையில் தலையிடாதீர்கள். செயலில் கூடுதல் கவனம் தேவை. நீண்டமுயற்சிக்குப் பின் எண்ணம் நிறைவேறும். தாய் வழி உறவுகள் உதவிபுரிவர்.



**இடபம்:** நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் உதவி செய்வர். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும்.



**மிதுனம்:** பேச்சில் கவனம் தேவை. நிதானமாக செயற்படுவதால் நன்மை அதிகரிக்கும். மற்றவர் செயற்பாடு எரிச்சலை உண்டாக்கும். அமைதி காப்பது நல்லது.



**கடகம்:** வேலைப்பளு அதிகரிக்கும். குழப்பம் ஏற்படும். செயலில் கவனம் தேவை. மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். செயலில் தடை விலகும்.



**சிம்மம்:** வீட்டில் உள்ள பழுதுகளை சரிசெய்வீர்கள். சிலர் புதிய வாகனம் வாங்குவர். அலைச்சல் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். சிந்தித்து செயற்படுங்கள். பிரச்சினை விலகும்.



**கன்னி:** எதிர்பார்த்த வருமானம் வரும். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பொருளாதார [illegible] அடைப்பீர்கள். முயற்சி நிறைவேறும்.



**துலாம்:** வியாபாரத்தில் தடைகளை சரிசெய்வீர்கள். உங்கள் முயற்சிக்கு நண்பர்கள் துணைபுரிவர். வேலைக்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சி இழுபறியாகும். எச்சரிக்கை அவசியம்.



**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். தந்தைவழி உறவால் நன்மை ஏற்படும். முன்னோர் அருளால் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்குரிய அறிகுறி உண்டாகும். திட்டமிட்டு செயற்பட்டு எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள்.



**தனுசு:** வெளியூர் பயணத்தால் சங்கடம் உண்டாகும். முயற்சிகள் இழுபறியாகும். எதிர்பார்ப்பில் சங்கடமான நிலை ஏற்படும். பணநெருக்கடியால் குழப்பம் தோன்றும்.கடன் தொல்லை உண்டாகும்.



**மகரம்:** எண்ணம் நிறைவேறும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். வாழ்க்கைத் துணையால் முயற்சி வெற்றியாகும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும்.



**கும்பம்:** எதிரி தொல்லை மறையும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர். திட்டமிட்டு செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அந்நியரால் உதவி கிடைக்கும்.



**மீனம்:** எதிரி தொல்லை மறையும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர். திட்டமிட்டு செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அந்நியரால் உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA

# INVITATION FOR BIDS (IFB)

## Procurement of Medical Equipment & Generator

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified following Tables.
  01) Medical Equipment
  02) Generator
Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
  01) Bidders shall have valid business registration
  02) and business registration for supply of respective Supplies and Service

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Conduct No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours.

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 26.09.2022 to 07.10.2022 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids shall be delivered to Chairmen, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No.572/3, Hospital Road Jaffna on or before 10.30 Hours of 10.10.2022. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidder's representatives who choose to attend.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre-bid Conference will be held at Conference Hall, Office of the Regional Director of Health Services, Jaffna commencing at 10.00am on 03.10.2022.

H. A complete set of bid document for this bid will be issued by Email to the interested bidders.

I. Procurement committee will be the right to make final decision in regard the accept.

**Table: I**

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/ME/2022/05/A | Dental Unit Chair | 10 | 1,000.00 | 407,500.00 |
| | Light Cure Machine | 07 | | |
| | Ultrasonic Scaler | 10 | | |
| | Dental Compressor | 01 | | |
| | Contra angle hand piece with Air motor base | 02 | | |
| | Air motor hand piece 4 hole | 10 | | |
| | Air motor hand piece 2 hole | 05 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/B | Sterilizer Electric | 05 | 1,000.00 | 250,000.00 |
| | Mini Auto Clave (Semi) | 06 | | |
| | Autoclave-Table top | 06 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/D | Laparoscopy Accessories - I | 01 | 1,000.00 | 100,000.00 |
| | Laparoscopy Accessories - II | 01 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/E | Multipara Monitor Basic | 02 | 1,000.00 | 182,000.00 |
| | Multipara monitor with Capnography | 03 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/G | Ultrasound Scanner | 02 | 1,000.00 | 560,000.00 |
| NP/RDHS/PSSP/ME/2022/05/H | Infra-Red lamp with stand | 01 | 1,000.00 | 30,200.00 |
| | CPM (Continuous passive motion machine) | 01 | | |
| | ECT Machine | 01 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/I | Wall Oxygen for A&E | 01 | 1,000.00 | 140,000.00 |

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/ME/2022/05/C | Wheel Chair | 10 | 1,000.00 | 89,800.00 |
| | Stretcher Wheel (Silver) | 08 | | |
| | Linen Chamber (Silver) | 04 | | |
| | Ward round trolly (Movable, Silver) | 07 | | |
| | Medicine Trolley (Movable, Silver) | 04 | | |
| | Emergency Trolly (Movable, Silver) | 04 | | |
| | Injection Trolley (Movable, Silver) | 04 | | |
| | Dressing Trolly (Movable, Silver) | 04 | | |
| | Ward Bed | 02 | | |
| | Bed Examination (Steel)Adjustable Head Part | 01 | | |
| NP/RDHS/PSSP/ME/2022/05/F | BP Box Digital | 06 | 1,000.00 | 53,400.00 |
| | Nebulizer Machine | 02 | | |
| | Diagnostic Set | 01 | | |
| | Spot Lamp | 04 | | |
| | Weight Scale | 03 | | |
| | Knee Hammer | 01 | | |
| | Height Measuring Scale | 01 | | |
| | Suction unit | 01 | | |
| | BP Appretinas Table Model - Aneroid | 11 | | |
| | Lacto Meter | 72 | | |
| | Food Thermometer | 72 | | |
| | CTG Machine | 01 | | |

**Table: II**

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/Geni/2022/01 | 85KV Generator | 03 | 1000.00 | 126,000.00 |
| | 50KV Generator | 02 | | |
| | 15KV Generator | 01 | | |

Chairperson,
Regional Procurement Committee,
RDHS Office, Jaffna.

(CR 38048)(3/6)



# பலாலியில் எறிகணை!

யாழ்ப்பாணம், செப். 23

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று எறிகணையொன்று மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள காணியொன் றைக் காணியின் உரிமையாளர் துப்புரவுக்கு உட்படுத்தியநிலையில் மேற்படி எறிகணையை அவதானித்து, பலாலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே மேற்படி எறிகணை மீட்கப்பட்டுள்ளது.

(ம-125)

# ஆண்டு நிறைவும் காணொலி வெளியீடும்

கொழும்பு, செப். 23

சுவாமி விவேகானந்தரின் இலங்கைப் பயணத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன், இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் செயற்பாடுகள் பற்றிய ஆவணக் காணொலி வெளியீடும் நாளைமறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-14-20)

நாஹறா மருத்துவ நிலையம்
கடுமையான கை. கால் விறைப்பு. பாரிசவாதம். மூட்டுக்கள் தேய்வு. முழங்கால்வாதம். தீராத புண்கள் - சிறப்பு சிகிச்சை -
T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.


பணிப்பெண் தேவை
கோண்டாவில் பகுதியில் வீட்டு வேலைக்குப் பணிப்பெண் தேவை.
077 406 0806 (CS 20904) (3/6)

வாடகைக்கு
நெடுங்குளம் றோட் அருளம்பலம் லேன். அரியாலையில் 3 Bedroom, Hall, kitchen, 2bathroom; 2 balcany உடனான மாடி வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு. (CS 20898) (3/6)
074 216 8717, 074 223 6815

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 10 . 1947



இறப்பு 22 . 09 . 2022

## கந்தையா புனிதரத்தினம் (கிளி)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா புனிதரத்தினம் நேற்று (22.09.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அழகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் (பவா) அன்புக் கணவரும், சுகிர்தா (ஆசிரியர் - கோண்டாவில் இந்துக் கல்லூரி), சுகுணா (யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சுதர்ஷன் மற்றும் சுவானி (பிரான்ஸ்), பார்த்தீபன் (இலங்கை போக்குவரத்துச் சபை - யாழ். சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலபுத்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற நிர்ணியநாதன் மற்றும் ஜெசிந்தன் (பிரான்ஸ்), மலர்மதி (HNB- திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சதுர்ஷன், ரகுராம், நிருஷிகன், பிரகல்யா, சதுர்த்திகா, டக்ஷாயினி, கிஷாருன், டிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா (கனடா), தம்பிஐயா (கனடா), தங்கமணி, சுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்ணகை அம்மன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**
**T.P.: 077 663 0068, 071 872 8745, 077 598 4519**

**தகவல்: குடும்பத்தினர்**

(cs46568) (2.6)

# மரண அறிவித்தல்



## நல்லதம்பி அருமைத்துரை (போசப்பா)

கற்பக்குனை கந்தரோடை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கற்பக்குனை உடுவில், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி அருமைத்துரை (போசப்பா) கடந்த (19.09.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - கனகம்மா தம்பதியரின் அருமைப் புத்திரனும், காலஞ்சென்ற இராசையா - பவளரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், றஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் அன்னரத்தினம், அற்புதம் (தேவி), சுசீலாதேவி (சந்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சதீஸ் (பிரான்ஸ்), றமேஸ் (கொமர்சல் அபிவிருத்தி கம்பனி), சங்கீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிலா (பிரான்ஸ்), தாட்சாயினி (குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்), கஜானா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சானுஜன் (பிரான்ஸ்), அப்ஷரன், தஸ்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தவநாதன் மற்றும் லோகினிதேவி, சுகுணாதேவி (கனடா), கருணாதேவி, சுபத்திராதேவி (பிரான்ஸ்), லோகநாதன் (ஜேர்மனி), சிவன்செயல், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சபாநாயகம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு, இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகன் - 077 617 9146**
**மருமகள் - 077 760 7093**

(cs20903) (2.6)

**தகவல்: குடும்பத்தினர்**

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 23

அராலி முருகமூர்த்தி வித்தியா சாலையின் பரிசளிப்பு விழா, பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தி.தவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் த.நடனேந்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (ம-14)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 24.08.2022 புதன்கிழமை இறை பதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## கணபதி கந்தவனம்

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை அதி காலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CK 3805) (3.6)

**மத்தொனி, கரவெட்டி.**
**தொ.பே. 021 226 2076**

**மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1935



மறைவு 21 . 09 . 2022

## திருமதி சாரதாம்பிகை சுப்பிரமணியம்

(ஓய்வுநிலை நெசவுப் போதனாசிரியர்)

நல்லூர் வடக்கு, புலவனார் வீதியைச் சேர்ந்த திருமதி சாரதாம்பிகை சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (21.09.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியம் (பூராசா, நெசவு ஆசிரியர்), அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவகாமிப் பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - கண்ணகைப் பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், உதயசெல்வி, தாமரைச்செல்வி (கனடா), உதயசெல்வன் (பிரான்ஸ்), தயாதரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், யோகதாஸ் (*c.lab*, ஊரெழு), ஶ்ரீதர் (கனடா), புஷ்பமலர் (பிரான்ஸ்), மயூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமேஸ்வரி, இராமநாதன், நாகேஸ்வரி, சுவாமிநாதன் மற்றும் புவனேஸ்வரி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சயந்தன் - கஸ்தூரி, காயத்திரி - யாதவன் (அவுஸ்ரேலியா), நிரோசன் (கனடா), மாதுளா (கனடா), டெனீஷன் (கனடா), ரேதுசன் (பிரான்ஸ்), சுகாசன் (பிரான்ஸ்), அஸ்மிதா (கனடா), அகிஷ் (கனடா), அபினாஷ் (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், மாயா (அவுஸ்ரேலியா), யாறா (அவுஸ்ரேலியா), அபிஷயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**27, புலவனார் வீதி,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(CS 20895) (3.6)

**021 222 8282 (இலங்கை)**
**+ 1 (438) 630 - 1514 (தாமரைச்செல்வி - மகள்)**
**+ 1 (514) 962 - 7765 (தயாதரன் - மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுக்குநாறிமலை வழக்கு

# உண்மையான குற்றவாளிகளை நீதிமன்றில் முற்படுத்துங்கள்

## பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு

வவுனியா, செப். 23

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் உண்மையான குற்றவாளிகளை முற்படுத்துமாறு வவுனியா நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களமும், நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பான உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதராங்களுடன் கண்டறிந்து, எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-110)

### மின்வெட்டு...

மின்சாரத் தேவை திடீரென அதிகரித்தமை ஆகியவை இதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் வேளையில் 1 மணி நேரமும், இரவு வேளையில் ஒரு மணி நேரம் 20 நிமிடமும் மின்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-ஒ-இ)

### பலாலிக்கு...

எனவே, ஒரு விமானத்தையாவது கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுங்கள் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் துறைசார் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பலாலி விமான நிலையத்துக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். வெளி மாவட்டங்களில் இருந்து எவரும் கொண்டு செல்லப்படவில்லை. 'விரைவில் விமான நிலையத்தை திறவுங்கள், விமானங்கள் அனுப்பப்படும்' என்று சில விமான சேவை நிறுவனங்கள் உறுதியளித்திருந்தன. ஆனால், இதுவரையும் எந்தவொரு விமானமும் அங்கு வரவில்லை. தேவையான ஏற்பாடுகளை நாம் செய்துகொடுத்துள்ளோம்.

இந்திய எயார் லைன்ஸ் விமானம் வருமெனக் கூறப்பட்டது. அதுவும் வரவில்லை. தூது அனுப்பினோம். தீர்வில்லை. பிரச்சினைகள் இருந்தால் எம்முடன் பேச்சு நடத்தலாம். அதற்கான கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

பலாலி விமான நிலையத்துக்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. எனவே, இந்தியாவுக்குச் சென்று பேச்சு நடத்தி, ஒரு விமானத்தையாவது கொண்டு வாருங்கள். எமது தரப்பில் செய்யக்கூடிய அனைத்தையும் செய்துள்ளோம் - என்றார்.

இதற்குப் பதிலளித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இரத்மலானை மற்றும் மத்தள விமான நிலையங்களில் பயணிகளுக்கான வரி இரத்து செய்யப்பட்டுள்ளதுபோல பலாலிக்கும் செய்தால் ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது செய்தால், விமான சேவை உடனடியாக ஆரம்பமாகும். இந்தியாவின் எயார் வேர்ஸ் நிறுவனம் இதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனவே, எவரும் விமானம் கொண்டுவரவில்லை எனக் கூறவேண்டாம். இந்திய நிறுவனம் தற்போதுகூட தயார் நிலையில்தான் உள்ளது - என்றார். (அ-ஒ-44)

### ரவிகரன்...

முறைப்பாட்டுக்கு அமைவாக கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் குமுழமுனை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டக் குழுவின் தலைவருமான இரத்தினராசா மயூரன் ஆகியோர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை - தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரை மன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் பணித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட மேற்குறித்த இரண்டு பேரும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி..சரவணராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இருவருக்கு எதிராகவும் தண்டனை சட்டக்கோவையின் பிரிவு 140, பிரிவு 146 பிரிவு 147 மற்றும் பிரிவு 344 கீழ் பி (டீ) அறிக்கையைப் பொலிஸார் தாக்கல் செய்தனர். மூத்த சட்டதரணிகளான அன்ரன் புனிதநாயகம், கெங்காதரன், பரஞ்சோதி உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்த அனைத்து சட்டதரணிகளும் ரவிகரன், மயூரன் சார்பில் மன்றில் முன்னிலையாகி தமது வாதங்களை முன்வைத்தனர்.

ஏற்கனவே நீதிமன்றம் ஆக்கிய கட்டளையை மீறி குறித்த பகுதியில் தொடர்ந்தும் கட்டுமானம் நடைபெற்று வந்ததன் காரணத்தாலேயே இவர்கள் அங்கு சென்று ஜனநாயக ரீதியில் அமைதியாக போராட்டம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என மன்றின் கவனத்துக்கு சட்டத்தரணிகள் கொண்டு வந்தனர்.

ஆனால், பொலிஸாரோ 'இந்த வழக்கில் இன்னும் பலரைக் கைது செய்யவேண்டியுள்ளதாகவும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதன் காரணத்தாலேயே இவர்களை கைது செய்தோம்' என மன்றில் தெரிவித்தனர். இந்த நிலையில் சட்டதரணிகளின் வாதங்களை அடுத்து இரண்டு பேரையும் தலா இரண்டு இலட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

வழக்குத் தொடர்பில் மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்ததாவது,

குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான பணிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் கடந்த ஜுன் மாதம் 12ஆம் திகதி இருந்த நிலைமையைப் பேணுமாறு வழங்கிய நீதிமன்றக் கட்டளையை தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் குருந்தூர்மலையில் இருக்கின்றவர்களும் மீறியதாலேயே ஆர்ப்பாட்டம் இடம்பெறவேண்டிய தேவையுள்ளது என மன்றுக்கு சான்றுகள் ஊடாக சட்டத்தரணிகளால் எடுத்துரைக்கப்பட்டது. இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் மன்று வினவியதன் பின்னர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பதிலைப் பெறுவதற்காக தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை அடுத்த தவணைக்கு மன்றில் பதிலளிக்குமாறு தெரிவித்து வழக்கை எதிர்வரும் 13ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். பொலிஸார் அன்றைய தினம் வரைக்கும் ஏற்கனவே மன்றில் இருந்த கட்டளையைப் பேணுவதற்கு உத்தரவாதம் தருவதாகத் தெரிவித்துள்ளனர் - என்றார். (அ-ஒ-19-246)

### அரசாங்கத்துக்கு...

களை கைது செய்தமைக்கு எதிராகவும், இந்த விவகாரத்தை மிகக் கொடூரமான முறையில் அடக்குவதற்கு - நசுக்குவதற்கு முயலும் - அரசுக்கு எதிராகவும் முல்லைத்தீவிலும், யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால், பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக நேற்று நண்பகல் 12 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதியூடாகச் சென்று பரமேஸ்வராச் சந்தியை அடைந்தனர். அங்கு பலாலி வீதியை முடக்கி சிறிது நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் மீண்டும் யாழ். பல்கலையை வந்தடைந்தனர்.

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதியை நிலைநாட்டக் கோரி நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இ.மயூரன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களை விடுவிக்குமாறு கோரியே மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

'ரவிகரன் மற்றும் மயூரனை விடுதலை செய்', 'எமது காணி எமக்கு வேண்டும்', 'எமது மலை எமக்கு வேண்டும்', 'குருந்தூர்மலையை ஆக்கிரமிக்காதே', 'மக்களோ பட்டினியில் அரசோ நில ஆக்கிரமிப்பில்', 'சர்வதேச நீதிவேண்டும்', 'குருந்தூர்மலை எங்கள் சொத்து', அரசின் கைக்கூலியா தொல்லியல் திணைக்களம்?', 'திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து', 'வடக்கும் - கிழக்கும் தமிழர் தாயகம்', போன்ற கோஷங்கள் பல்கலைக்கழக மாணவர்களால் எழுப்பப்பட்டன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்க விற்பனை நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பித்த ஆர்ப்பாட்டப்பேரணியானது, முல்லைத்தீவு பொலிஸ் நிலையம்வரை சென்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எமது நிலம் எமக்குவேண்டும்', 'ரவிகரனையும் மயூரனையும் விடுதலைசெய்', 'வடக்கும் - கிழக்கும் தமிழர்தாயகம்' உள்ளிட்ட பல கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125-246)

### சகோதரரின்...

ஸார் தேடுதலை தொடங்கியுள்ளனர்.

போதைப் பாவனைக்கு அடிமையான இளைஞன், அண்மைக்காலமாக பல பெண்களுடன் தவறாக நடக்க முற்பட்டார் என ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் தனது மூத்த சகோதரன் வீட்டில் இல்லாத வேளையில், சகோதரனின் மனைவியை மிரட்டி - அச்சுறுத்தி தவறான உறவுக்கு முயற்சித்துள்ளார். இருப்பினும் அவர் சாதுரியமாக தடுத்து இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

பொலிஸார் சம்பந்தப்பட்ட இளைஞனைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-5)


**பௌதிகவியல்**

2024 A/L
(English .தமிழ் மூலம்)
பொறியியல்
By.M. கருணாநிதி (B.Sc)
(0776183064)

PHYSICS WORLD
கலைமகள் வீதி, அரியாலை
SAT.TEU.THU- 06.00 P.m

பெருமாள் கோவில் வீதி
(SCIENCE HALL அருகில்)
SAT.SUN - 08.00 A.m

ஆரம்பம் - 24.09.2022 [சனி]

**யா /ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை சுன்னாகம்**

**ஸ்கந்தவரோதயன்களின்**
**வருடாந்த ஒன்று கூடல்**

- காலம் : 24. 09. 2022 சனிக்கிழமை
- இடம் : கல்லூரி மைதானம்
- நேரம் : பிற்பகல் 4.30 மணி

மேற்படி நிகழ்வில் அனைத்து **பழைய மாணவர்களும்** தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


22.09.2022

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி.
(077 240 5601)

(cs.20896) (2.6)


**மரண அறிவித்தல்**

தோற்றம் 21 . 08 . 1936



மறைவு 22 . 09 . 2022

**நமசிவாயம் கமலாதேவி**

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் கமலாதேவி நேற்று (22.09.2022 ) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் சரஸ்வதி, கிருஷ்ணபிள்ளை நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி லோகநாதன், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் மங்களாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்; பிரதீபா, கரிகஜன், அஜித்குமார், லக்சியா, அக்ஸியா, தனுஷிகா, அஷ்வர்யா ஆகியோரின் பேர்த்தியும், புவனிஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துசெல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

தங்கோடை, காரைநகர்
077 654 6761 (மகள்)
077 755 7316 (மகன்)

(CS 20900) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2023

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள். இறைச்சிக்கடைகளினை 2023 ஆம் ஆண்டிற்கு (01.01.2023 - 31.12.2023) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 26.09.2022 - 10.10.2022 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 10.10.2022 பி.ப 02.00 மணி வரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 10.10.2022 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி**

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சந்தைகள். இறைச்சிக்கடைகள் குத்தகை - 2023" என எழுதி மூலப்பிரதியை "தவிசாளர். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம். புத்தூர்" என்னும் முகவரிக்கும். இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன் பண்ணை வீதி. யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 10.10.2022 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT.NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் வாகன தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500.00 | 25,000.00 | **8,777,505.00** | |
| 02 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடம் | 500.00 | 2000.00 | **68,200.00** | 500.00 |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | **1,650,121.00** | 1200.00 |
| 04 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | **1,172,225.00** | 1200.00 |
| 05 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | **313,500.00** | |
| 06 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | **288,190.10** | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | **3,168,000.00** | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | **385,000.00** | |
| 03 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | **385,000.00** | 500.00 |
| 04 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும் வாகன தரிப்பிடமும் (பொதுக்கிணறு. சுற்றுலா மையம் தவிர்த்து) | 500.00 | 2000.00 | **641,300.00** | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 | கோப்பாய் மீன் சந்தையும் வாகன தரிப்பிடமும் | 500.00 | 2000.00 | **232,980.00** | |
| 02 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | **3,423,475.00** | 2250,00 |
| 03 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | **486,200.00** | 2250.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | **3,045,664.60** | 2250.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | **683,210.00** | 2250.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தையும். வாகன தரிப்பிடமும் | 500.00 | 3000.00 | **914,705.00** | |
| 04 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | **486,200.00** | 2250.00 |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன். மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப்பட்டியல்/ வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
08. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை. தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
09. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு. மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்**

**2022.09.23**

(CR 38049) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பல்பொருள் அங்காடிகளில் பியர் விற்பனை வேண்டும்

*டயனா கமகே அரசிடம் கோரிக்கை*

கொழும்பு, செப். 23
நாட்டில் பல்பொருள் அங்காடிகளுக்கு பியர் விற்பனை உரிமம் வழங்கவேண்டும். நாடு முழுவதிலு முள்ள மதுபான நிலையங்கள் அனைத்தும் இரவு 10 மணிவரை திறக்கப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் டயனா கமகே அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரச வருவாய் அதிகரிப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரவு 9 மணியுடன் மதுபான நிலையங்கள் மூடப் படுவதால் மக்கள் கறுப்புச் சந்தையில் மதுபானங்களைக் கொள்வனவு செய்ய நேரிடும். இதனால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரி இல்லாமற் போகின்றது. நாட்டுக்குத் தற்போது டொலர் தேவைப்படுகிறது. ஆனால். இரவு விடுதிகளுக்கு அனுமதி வழங்கப் படுவதில்லை.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு மனோபாவத்தில் மாற்றம் அவசியம் - என்றார். (ச-இ)

## பேராதனைப் பல்கலையின் மாணவன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 23
கடந்த வாரம் காணாமற்போன பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் கண்டி மகாவலி ஆற்றங்கரையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யக்கல பகுதியைச் சேர்ந்த 24 வயதான மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளான். இவர் கடந்த 18ஆம் திகதி காணாமற்போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

மாணவனின் இறப்பு தொடர்பில் பேராதனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 23
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்றாம் கட்டை ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-125)

இந்தியா

## பத்தாண்டுகளில் 7 சதவீத வளர்ச்சி

புதுடில்லி, செப். 23

முதலீட்டுச் செலவுகள் அதிகரிக்கும் என்றும், இலத்திரனியல் (டிஜிற்றல்) பொருளாதாரம் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதால், இந்தப் பத்தாண்டுகளில் இந்தியா ஆண்டுக்கு 7 சதவீத வளர்ச்சி அடையும் என்று இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரம் இந்த நிதியாண்டில் 7 சதவீதத்துக்கும் அதிகமாக வளரும் என்று இந்திய அரசாங்கம் ஏற்கனவே எதிர்வு கூறியுள்ளது.

கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 13.5 சதவீதமாக இது உயர்வடைந்துள்ளது. ஆயினும், அதிக வட்டி விகிதங்கள் பொருளாதார நடவடிக்கைகளை பாதிப்பதால் எதிர்வரும் காலாண்டுகளில் வளர்ச்சி வேகத்தை இழக்கக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

'சர்வதேச முகவர்கள் இந்தியாவின் வளர்ச்சியை 6 சதவீதமாகக் காட்டினாலும், இந்த தசாப்தத்தின் எஞ்சிய மற்றும் அதற்குப் பிறகும் ஆண்டுக்கு 7 சதவீத வளர்ச்சி இருக்கும்' என்று தலைமை பொருளாதார ஆலோசகர் ஏ.ஆனந்த நாகேஸ்வரன் கூறினார்.

இந்த ஆண்டு டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு 7 சதவீதத்துக்கும் அதிகமாக சரிந்ததால், நுகர்வோர் மற்றும் வணிகங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

ஜெனிவா விவகாரம்;

# அரசமைப்புக்கு அன்று முரணில்லை; இப்போது எப்படி முரணாகியது?

### கூட்டமைப்பு கேள்வி? நீதியமைச்சர் மழுப்பல்

கொழும்பு, செப். 23

இலங்கை அரசாங்கம் 2015ஆம் ஆண்டு இணைஅனுசரணை வழங்கிய விடயம் இப்போது எப்படி அரசமைப்புக்கு முரணானது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு உருப்படியாகப் பதிலளித்ததாக நீதி அமைச்சர் விஜயதாஸ, வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்துவதாகக் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது, போர்க்குற்றம் தொடர்பில் வெளியக விசாரணைகள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானவை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார். இது தொடர்பில், 'கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் அனுசரணையில் அதாவது அவரது இணக்கத்துடன், 33/1 என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதில், சர்வதேச நாடுகளில் நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற்றப்பட்டிருந்தது. எனினும், இந்த முறை வெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதியமைச்சராக விஜயதாஸ ராஜபக்சவும் ஜெனிவா சென்றிருந்த நிலையில், அரசாங்கத்தின் நிலைப்பாடு அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது. இதன்போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியகப் பொறிமுறை அரசமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டிருந் தார். முன்னதாக 2015 ஆம் ஆண்டு அரசமைப்புக்கு உட்பட்டிருந்த இந்த விடயம், தற்போது அரசியலமைப்புக்கு முரணானது எப்படி?' என்று சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது.

இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையைத் தாமும் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். எனினும், மாறி வந்த அரசாங்கங்கள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த நிலையில், இந்தப் பிரச்சினை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு - கிழக்கில் நிலையான சமாதானத்தைப் பேணும் வகையில் அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## நாகர்கோவில் படுகொலை நினைவேந்தல் நேற்று!

யாழ்ப்பாணம், செப். 23

நாகர்கோவில் பாடசாலை மீது 1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புக்காரா விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 22 மாணவர்கள் உட்பட 36 பேர் படுகொலை செய்யப்பட்ட, 27ஆம் ஆண்டு நினைவேந்தல் நாகர்கோவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று இடம்பெற்றது. ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் , ஆசிரியர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகள் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ-27)

## கொழும்பு பேருந்துகள் இனிமேல் கோட்டையில் தரித்தால் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 23

தனியார் நெடுந்தூர (கொழும்பு) பேருந்துகள் இன்று முதல் முனீஸ்வரன் வீதியிலுள்ள (புல்லுக்குளம் முன்பாக) புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் என்று யாழ். மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

'தொல்பொருள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, யாழ். பொலிஸ் பிரிவு என்பவற்றுடன் இணைந்து மாநகரசபை இந்த நடைமுறையை ஒழுங்குபடுத்தியுள்ளது. கோட்டைப் பகுதியில் நிறுத்திவைக்கப்படும் நெடுந்தூர (கொழும்பு) பேருந்துகள் அனைத்தும் இடுகாடு வீதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காணியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடத்திலேயே தரிக்கவேண்டும். கோட்டைப் பகுதியில் இன்று முதல் தரித்து நிற்கும் பேருந்துகளுக்கு தண்டப்பணம் அறவிடவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது' - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

ரூபா 6 இலட்சம் பெறுமதியான

## திருட்டுப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 23

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவால் 6 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, சிறுப்பிட்டிப் பகுதியில் வீடு உடைக்கப்பட்டு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் தளபாடப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் வீடானது வேறு ஒருவரின் கண்காணிப்பின் கீழ் காணப்பட்டது. வீட்டைப் பராமரிப்பவர் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களே வந்து வீட்டைப் பார்வையிடுவார். இந்நிலையில் களவு இடம்பெற்றதையடுத்து வீட்டைப் பராமரிப்பவரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

புத்தூர், அச்செழு மற்றும் சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த மூவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளதுடன் களவாடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். (ஒ-27)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனியாருக்கு வழங்கத் தீர்மானம்

### நவம்பர் முதல் நடைமுறை என அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஆயிரத்து 250 எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டை தனியாருக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களை தனியாருக்கு வழங்குவதற்கான வேலைதிட்டத்தின் மீளாய்வு கூட்டத்தின் போதே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் கட்டுப்பாட்டை பெற்றுக்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கும், எரிபொருளை விநியோகிப்பதற்கும், எரிபொருளை விற்பனை செய்வதற்கும் அதிகாரங்களை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபத்தின் எரிபொருள் நிலையங்களை தனியாருக்கு விற்பனை செய்யும் திட்டத்துக்கு அமைய இதுவரை 24 நிறுவனங்களிடமிருந்து கேள்வி பத்திரத்துக்கான இணக்க மனு கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## டீசல் கப்பலுக்கு முழுக் கட்டணம்!

கொழும்பு, செப். 23

நாட்டை வந்தடைந்துள்ள டீசல் கப்பலுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. 41 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் அடங்கிய கப்பலுக்கே இந்தக் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - கொள்வனவு செய்யப்பட்ட பெற் றோல் அடங்கிய கப்பலிலிருந்து தரையிறக்கும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பணியாளர்களின் சம்பளத்துக்கு ஆபத்தில்லை!

கொழும்பு. செப். 23

அரசாங்கம் ஒருபோதும் அரச பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதை தவிர்க்காது. இக்கட்டான சந்தர்ப்பங்களில் வேறு செலவுகளைக் குறைத்து, அதனூடாக சம்பளங்களை வழங்கும். இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

'அரச பணியாளர்களுக்கு பணம் செலுத்தமுடியாத நிலை ஏற்பாட்டுள்ளதாக (அமைச்சர் பந்துல) அறிவித்தீர்கள். நாளைமறுதினம் அரச பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும். எனவே இந்த மாதத்துக்குரிய சம்பளம் கிடைக்குமா என்பதை நீங்கள் தெளிவுபடுத்தவேண்டும். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்பட்ட இணக்கத்தின் பிரகாரம் பணத்தை அச்சிடமுடியாது என்று தெரிவித்திருந்தீர்கள். நாம் வினவியபோது, சர்வதேச நாணய நிதியத்துடன் எந்த உடன்படிக்கையும் இல்லை. வெளிப்படுத்த ஒன்றும் இல்லை என்கிறீர்கள். இந்த முன்னுக்குபின் முரணான விடயம் தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும்' என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 16 தடவைகள் கடன் பெற்றுள்ளது. கடந்த அரசாங்கமும் 1.5 பில்லியன் டொலரை கடனாகப் பெற்றது. அவ்வாறான எந்தச் சந்தர்ப்பத்திலும், ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றுக்கு அறிவிக்கப்படவில்லை. அத்துடன், அரசாங்கம் ஒருபோதும் அரச பணியாளர்களுக்கு வழங்குவதை தவிர்க்காது - என்றார்.

(அ-ஒ-இ)

## சுற்றுலாவிப்...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காரைநகர் - கசூரினா கடற்கரைக்கு அண்மையாகவுள்ள வெளிச்சக் கூட்டுக் கோபுரப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாவியாக வந்த பெண்ணும் அவரது நண்பரும் சென்று கொண்டிருந்த போது அவர்களை 10க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சுற்றிவளைத்து, தகாத வார்த்தை பிரயோகங்களையும் மேற்கொண்டுள்ளனர். அவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். இதன்பின்னர் சில இளைஞர்கள் சுற்றுலாவிப் பெண்ணுடன் பாலியல் சேட்டையிலும் ஈடுபட்டுள்ளனர்.

நீண்ட போராட்டத்தின் பின்னர் அவர்களிடமிருந்து தப்பித்த பெண், பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக, நேற்று இரவே 10 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-5)

## இராவணனும்...

இலங்கையில் இராவணன் என்ற மன்னனும் இல்லை. சிவ வழிபாடும் கிடையாது என்று தெரிவித்த முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர, திருக்கோணேஸ்வரம் ஆலயத்திலுள்ள கடைகளைச் சிங்களவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆலய பரிபாலன சபையே விரும்பும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் எதிர்ப்பது அவர்களின் அரசியல் ஆதாயத்துக்கே எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின்னணி காணப்படுகின்றது. இராணவன் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுப்பட்டார் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால், இராவணன் என்ற மன்னன் இருந்தாரா, அவர் தமிழரா, சிவ வழிபாட்டில் ஈடுபட்டாரா என்பதற்கு எந்தவித சான்றும், வரலாறும் இல்லை.

திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகின்றது. இதில் 18 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரம் கோயிலுக்குச் சொந்தமானது.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் சுமார் 60 கடைகள் உள்ளன. இந்தக் கடைகளைச் சிங்கவர்கள் வைத்திருப்பதால் கூட்டமைப்பினர் அதற்கு எதிராக இனவாதமாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் வீதி இருமருங்கில் உள்ள கடைகளைப் புதுப்பிக்க ஆலயத்தின் நிர்வாக சபையினர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். கிழக்கு மாகாண ஆளுநர் இனவாதமற்றவர்.

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின்னணியே காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தூபிகள் இருந்துள்ளன. அவற்றில் மூன்று தூபிகள் கடலை நோக்கியதாக அமைந்ததால் அது திருக்கோணேஸ்வரம் எனப் பெயர் பெற்றுள்ளது.

அத்துடன் மகாவம்சத்திலும் இவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எமக்கும் வரலாறு தெரியும். நாங்களும் குறிப்பிடுவோம்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் தொன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் பாதுகாக்கின்றோம். அதுபோல் நீங்களும் குருந்தூர்மலையைப் பாதுகாக்க கவனம் செலுத்துங்கள். அங்கு தமிழ் அடிப்படைவாதிகளால் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ஒ-22)

## பிள்ளைகளின்...

இது தொடர்பான விவரங்களை 'உதயன்' மின்னஞ்சல் ஊடாகக் கோரி திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெற்றோரால் பராமரிக்க முடியாது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டு 281 ஆகக் காணப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு 259 ஆகக் குறைவடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டு 174ஆக அது வீழ்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டு 158 ஆக அந்த எண்ணிக்கை மிகப் பெரிய சரிவைக் கொண்டுள்ளது.

ஆனால், பொருளாதார நெருக்கடி உச்சம் தொட்டுள்ள நடப்பு ஆண்டில் முதலாவது அரையாண்டில் மாத்திரம் 246 பேர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் யாழ். மாவட்டத்தில் 124 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 45 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7 பேரும், வவுனியா மாவட்டத்தில் 8 பேருமாக 246 பேர் இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சடுதியான எண்ணிக்கை அதிகரிப்புக்கான காரணம் தொடர்பில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் இ.குருபரனிடம் 'உதயன்' வினவியது.

'பொருளாதார நெருக்கடி காரணமாகவே பெற்றோர் தம்மால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாது என்று கூறுகின்றனர். எமக்கு கிடைக்கப்பெறும் ஒவ்வொரு கோரிக்கை தொடர்பிலும் கலந்துரையாடல் நடத்தப்பட்டு உண்மையில் பெற்றோரால் பராமரிக்க முடியாதுதான் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, வடக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் அவர்கள் சேர்க்கப்படுகின்றனர்' என்று பதிலளித்தார். (அ-ஒ-5)

நேரடி வகுப்புக்கள்
பின்வரும் நுழைவு /தெரிவு பரீட்சைகளுக்கு
• LL.B • B.A • B.Com
• University Aptitude
• People bank Assisant
பிரதி ஞாயிறு
9.30 am -1.30 pm
ஆரம்பம் - ஞாயிறு
(25/9) -9.30 am
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்சல் வங்கியருகில்)
T.P / Whatapp
0766883394

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்
02 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
• இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
• கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
• A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
• நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
• குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
• 20 அடிப் பாதையுடன்
074 31 87 263

வேலை வாய்ப்பு
தனியார் நிறுவனம் ஒன்றில் 25 வயதிற்கு மேற்பட்ட A/L பூர்த்தி செய்த ஆண், பெண் இருபாலாரினரும் விண்ணப்பிக்கலாம். தொழில் முன்னனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (CS 20902) (3/6)
077 590 7694, 076 680 6660

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில்
12 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
• மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
• K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
• பார்வையிடும் நேரம்
காலை 09.00- மாலை 06.00 மணி வரை
தொடர்பு- 076 755 8606
077 246 6031

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில்
24 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
• மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமானநிலையம் செல்லும் பிரதான வீதிக்கு அருகாமை
• தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 750 M தூரத்தில்
• K.K.S வீதியில் இருந்து 1KM தூரத்தில்
• இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில
077 874 8135 / 077 408 2649

Personal Classes
Business Studies & Accounting
Gr.10 & 11 in English Medium
Call for 077 301 5275
(வருகை தந்தும் கற்பிக்கப்படும்)
(Jaffna to Kopay)
(cs.46675) (2.6)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இருபாலையில் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
• பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
• 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
• BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
• 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
• யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
• 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
• பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை
0772880152
0771488348

காணி விற்பனைக்கு
உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவிலையும் பிரதேச சபையையும் அண்மித்த பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம்
(3 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்)
(cs.46557) (2.6)
077 538 4132, 070 617 2892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.